1973 மார்ச் 20]

இருக்கிறார்கள். சுற்று வட்டாரத்தில்கூட ஐந்து மைல் சுற்றளவில் வடமதுரை, பொன்னபுரம், செம்மேடு கிராமங்களில் மூன்று நடு நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இவைகளை எண்ணிப் பார்க்கும் போது நலத்துறை மூலமாக அங்கு பள்ளி தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

பெரியபுலியூர் அரிசனக் குடியிருப்பு

* 438 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி துணை வட்டம், பெரியபுலியூர் அரிசன காலனி மக்களுக்கு வீட்டுமனை வழங்கும் திட்டம் மேலும் கால தாமதப்படுவதன் காரணம் என்ன?

(இ) இது எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) பிரிவு 6 விளம்பல் அரசால் ஏற்கப்பட்டு 13—10—1971-ம் தேதியில் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. அரிசன நலத் தாசில்தாரால் அனுப்பப்பட்டுள்ள நில விலை மதிப்பீட்டு அறிக்கை செங்கை மாவட்ட ஆட்சியாளரின் அலுவலகத்தில் பரிசிலனையில் உள்ளது.

(இ) அரசால் நிதி ஒதுக்கீடு செய்தவுடன் அவார்டு பாஸ் செய்து விரைவில் பட்டாக்கள் வழங்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : நிதி ஒதுக்கீடுகள் விரைவாகச் செய்து 1973-க்குள்ளாக, இறுதியிலாவது மனைப் பட்டாக்கள் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவார்டு பாஸ் செய்து விரைவில் பட்டாக்கள் வழங்கப்படும்.

கோணப்பராயன்குளம் கிராமத்துக்கு சாலை வசதி

* 439 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், கோணப்பராயன்குளம் கிராம தாழ்த்தப்பட்ட மக்கள் சுடுகாட்டுப் பாதை இல்லாது சிரமப் படுகிறார்கள் என்பது உண்மையா?

[1973 மார்ச் 20

(இ) ஆம் எனில், பாதை அமைத்துத்தர அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம். உண்மைதான்

(இ) குளித்தலை தாலுகா ரெங்கநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்த சிற்றுபுரில் கோணபராயன்குளம் கிராமத்தில் வாழும் அரிசனங்களுக்கு சுடுகாட்டுப் பாதை அமைக்க ரெங்கநாதபுரம் கிராம புல எண் 509/2-ல், 7 செண்ட் புன்செய் நிலத்தை ஆர்சிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கான 4 (1) முன்மொழிவு வரைவு வாலாய ஆணை எண். 1116, நாள் 22—5—1971-ல் (சமூக நலத் துறை) ஒப்புதல் அளிக்கப்பட்டு 16—6—1971-ந் தேதிய தமிழ் நாடு அரசிதழில் பிரசுரமாகியுள்ளது.

திரு. த. சோனையா : அரிசனப் பெருமக்களுக்கு சுடுகாட்டுக்கு ரோடு போடுகின்ற முறையில் ஏற்கெனவே பஞ்சாயத்து யூனியனுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. இப்போது அந்த அதிகாரம் அரிசன நல அதிகாரிக்கு மாற்றப்பட்டு விட்டதால் காலதாமத மாகிறது. ஆகவே, உடனடியாக செய்து கொடுக்க வேண்டு மென்றால் மீண்டும் அந்த அதிகாரம் பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்றப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : காலதாமதம் அதனால் அல்ல. தாசில்தார்கள் மூலமாகத்தான் செய்து கொடுக்கப்படுகிறது. நிலத்தை எடுக்கின்றபோது நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தைக் கொடுக்க மறுப்பதால்தான் அதைப் பெறுவதிலே காலதாமதமா கிறதே தவிர, அலுவலர்கள் சார்பில் காலதாமதம் இல்லை.

Technical guidance by Ground Water Directorate

* 440 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state the details and the nature of the technical guidance given by the Ground Water Directorate to small cultivators in this State?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உலக வங்கியின் அனைத்துலக வளர்ச்சி நிறுவனம் (உலக வங்கி) வேளாண்மை மறு நிதி உதவிக் கழகம், மாநில நிலவள வங்கி, மற்றும் வர்த்தக வங்கிகள் சிறு விவசாயிகள் அபிவிருத்தி நிறுவனம், நடுத்தர விவசாயிகளும் மற்றும் விவசாய தொழிலாளர்கள் அபிவிருத்தி